**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 210/2024**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கவிக்குயில் | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | கனகராஜ் | தொழில் | : | சமையல் வேலை |
| கிராமம் | : | கருத்தானூர் | வயது | : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 29th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருத்தானூரில் குடியிருந்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் கனகராஜ் மற்றும் நடராஜனை எனக்கு தெரியும். புகார்தாரர் ஸ்ரீதரனை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.08.2023ம் தேதி, காலை 10.00 மணியளவில் கீழக்கலங்கலில் வசித்து வரும் முத்துராஜ் என்பவரை பார்க்க சென்று கொண்டிருந்தபோது, பகல் 11.30 மணிக்கு நானும், வெங்கடேஷ் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது என் கணவர் கனகராஜ் நான் தவறான நோக்கத்தில் அவரோடு

பேசிக்கொண்டிருப்பதாக என நினைத்து என்னை கூட்டிச் சென்றார் என்று என்னிடம் கூறினார் என்றும், நான் உடனே எனது அம்மா முத்துலட்சுமி மற்றும் சாட்சிகள் ராஜேஷ், கார்த்திக், மணிகண்டன் ஆகியோரை அழைத்துக்கொண்டு வெங்கடேஷ் சொன்ன இடமான கீழக்கலங்கல், சிவந்தி ஆதித்தனார் மண்டபம் எதிரேயுள்ள எனது வீட்டிற்கு மதியம் சுமார் 01.00 மணிக்கு வந்தோம் என்றும், அங்கு எனது வீட்டின் கீழ்ப்புறமுள்ள ஒரு மாமரத்தில் வெங்கடேஷை கயிற்றால் கட்டி, நகர விடாதபடி வைத்திருந்தார்கள் என்றும், எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது என்றும், அப்போது எனது அண்ணன் அன்பரசன் கையில் ஒரு அரிவாளுடனும், எனது கணவர் கனகராஜ் கையில் ஒரு அரிவாளுடனும், எனது மாமா நடராஜன் கையில் ஒரு அரிவாளுடனும் மற்றும் எதிரி முத்துமாரி என்பவரும் ஆக்ரோசமாக நின்றுகொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் முத்துராஜை பார்க்க வந்ததாக கூறினோம் என்றும், அப்போது எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசி, வெங்கடேஷின் மீது விரோதம் கொண்ட அன்பரசன் "என் வீட்டிற்கு எப்படி வரலாம், நீ உயிரோடு இருக்கக்கூடாது ல" என்று சொல்லி, அவர் கையில் வைத்திருந்த அரிவாளால், வெங்கடேஷின் கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும், அவர் இடது கையால் தடுத்ததில் அவருக்கு இடது கை பெருவிரலும், ஆள்காட்டி விரலும், நடுவிரலும் வெட்டுப்பட்டு, விரல்கள் துண்டானது என்றும், நாங்கள் தடுக்க போனபோது, எதிரிகள் கனகராஜீம், நடராஜனும் அரிவாளை வைத்து வெங்கடேஷை மறித்தார்கள் என்றும், மீண்டும் எதிரி அன்பரசன் அரிவாளைக் கொண்டு வெங்கடேஷின் இடது கை மணிக்கட்டில் வெட்டி மணிக்கட்டு பகுதியை துண்டாக வெட்டிப்போட்டு விட்டார் என்றும், எதிரி கனகராஜ் அரிவாளால் வெங்கடேஷின் இடது

கண்ணில் ஓங்கி வெட்டினார் என்றும், அதில் அவரது இடது கண்ணிலிருந்து மூக்கு வரை பலத்த இரத்தக்காயங்கள் ஏற்பட்டது என்றும், எதிரி நடராஜன் அரிவாளால் வெங்கடேஷின் வலது பக்க தோள்பட்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்றும், தடுக்க சென்ற அவர்களை அரிவாளைக் காட்டி கொன்று விடுவதாக மிரட்டினார்கள் என்றும், கயிற்றுடன் கட்டி வைத்திருந்த வெங்கடேஷை அவிழ்த்து, தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தோம் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஹைகிரவுண்ட் அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், என்னை தனியாக ஒரு ஆம்புலன்சில் சிகிச்சைக்காக கொண்டு வந்தார்கள் என்றும், ஸ்ரீதர் என்பவர் போலீசில் புகார் கொடுத்தார் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதினால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக  சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.30 19:35:47 +0530